JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1- Witness
for Prosecution

CC No. 76/2025 Crime No. 20/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | **PW. 1 ரோகினி** | Village | |
| Father's Name/Husband's Name | | Talukp | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 08.07.2026 | | | |

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் கோணமூப்பனூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். நான் எனது வீட்டில் உள்ள பீரோவில் எனது தோடு ½ பவுன், மாட்டல் ½ பவுன் மற்றும் கால் கொலுசு ஆகியவற்றை ஒரு பர்ஸில் போட்டு வைத்திருந்தேன். நான் காலையில் வேலைக்கு சென்றால் இரவு தான் வேலை முடித்து வீடு திரும்புவேன். இந்நிலையில் தேதி, மாதம் நினைவில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் காலையில் வேலைக்கு சென்று விட்டேன். எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருக்கும் மல்லி என்பவரது வீட்டிற்கு ஆஜர் எதிரி பிரகாஷ் வருவார். எனது குழந்தை பள்ளி சென்று விட்டு வந்து மாலையில் எனது வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்த பொழுது, ஆஜர் எதிரி பிரகாஷ் எனது வீட்டுக்குள் சென்றுள்ளார்.

அப்போது எனது மகள் எதிரி பிரகாஷிடம் எதற்காக எங்கள் வீட்டிற்குள் செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மகளிடம் மூச்சு விட்டாய் என்றால், கொன்று விடுவேன் என மிரட்டி உள்ளார். எனது மகள் பார்க்கும் பொழுது எதிரி எனது வீட்டு பீரோவின் மேலிருந்த பீரோ சாவியை எடுத்துக் கொண்டு இருந்துள்ளார். எதிரி எனது வீட்டின் பீரோவில் இருந்து ஒரு பர்ஸை எடுத்துக்கொண்டு சென்றதாக எனது மகள் எனக்கு போன் செய்தார். அன்றைய தினம் நான் சென்னிமலையில் வேலை செய்து கொண்டிருந்ததால், நான் வேலை முடித்து இரவு வீடு திரும்பி வந்து பார்த்தபொழுது, பீரோ திறந்திருந்தது. பீரோவில் இருந்த துணிகள் களைந்து கிடந்தன. நான் பீரோவை தேடி பார்த்த போது, பீரோவில் இருந்த பர்சை காணவில்லை. இரவு நேரம் என்பதால் என்னால் அன்றைய தினம் புகார் அளிக்க செல்ல இயலவில்லை. பின்னர் மறுநாள் காலையில் நான் அம்மாபேட்டை காவல் நிலையம் சென்று மேற்படி திருட்டு சம்பவம் தொடர்பாக பிரகாஷின் மீது புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு எதிரியை பிடித்து விட்டதாகவும், எதிரியிடமிருந்து மாட்டல் மற்றும் கொலுசை கைப்பற்றியுள்ளதாகவும் போலீசார் கூறினார்கள். பின்னர் நான் இந்த நீதிமன்றத்திற்கு வந்து மனு தாக்கல் செய்து மேற்படி பொருட்களை பெற்றுக் கொண்டேன்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.08 14:35:51 +0530

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளி கொலுசு மற்றும் தங்க மாட்டல்களை தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டேன். அந்த **புகைப்படம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், இந்த வழக்கின் ஆஜர் எதிரியின் மனைவி அமுதாவும் ஒன்றாக தான் ரோடு வேலைக்கு செல்வோம் என்றால், சரியல்ல. நாங்கள் ஒருபோதும் சென்றதில்லை. எதிரிக்கு ஐந்து பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தை என்றால், சரிதான். எதிரியின் நாலாவது பெண்குழந்தையின் பெயர் தாரணி என்றால், சரிதான். எதிரியின் பெண் குழந்தை தாரணி என்பவருக்கு சென்னையில் உள்ள நபருடன் திருமணம் ஆகிவிட்டது என்றால், சரிதான். திருமணம் போது தாரணி என்பவருக்கு 14 வயது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், நானும், அமுதாவும் சேர்ந்து தான் தாரணி என்பவருக்கு சென்னையில் உள்ள நபருடன் திருமணம் செய்து வைத்தோம் என்றாலும், மேற்படி சம்பவம் வெளியே தெரிந்தால் எங்கள் மீது பாலியல் வன்கொடுமையில் இருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவோம் என்பதாலும், மேற்படி விவரங்கள் ஆஜர் எதிரி எங்களிடம் கேட்டார் என்றாலும், அதற்காக ஆஜர் எதிரியின் மீது இந்த பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஆஜர் எதிரியின் மனைவி அமுதா வேற ஒரு நபரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார் என்றால், சரிதான்.

எதிரியின் குழந்தைகள் அனைவரையும் எதிரி தான் பார்த்து வருகிறார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மாமனார் வீட்டின் பக்கத்தில் தான் எனது வீடு உள்ளது என்றால், சரிதான். நான் அமுதாவை தூண்டி வேறொரு திருமணம் செய்து வைத்தேன் என்றாலும், இதை எதிரி என்னிடம் கேட்டதற்கு தான் அவர் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் என்னுடையதுதான் என்பதற்கு எந்த பில் ரசிதும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்த புகாரை யார் எழுதினார்கள் என்றால், போலீசார் எழுதினார்கள். என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் நேரடியாக எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பாலியல் வன்கொடுமிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்காக நானும், ஆஜர் எதிரியின் மனைவி அமுதாவும் கூட்டு சதி சேர்ந்து எதிரி மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:35:56 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2- Witness
for Prosecution

CC No. 76/2025 Crime No. 20/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | **PW. 2 – காமராஜ்** | Village | |
| Father's Name/Husband's Name | | Talukp | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 08.07.2026 | | | |

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அட்டவணை புதூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 06:30 மணி முதல் 07:00 மணிக்குள் நான் ரோகிணியின் வீட்டு வழியாக வேலைக்கு சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, ஆஜர் எதிரி பிரகாஷ் ரோகிணியின் வீட்டிலிருந்து வெளியே ஓடினார். அங்கிருந்தவர்கள் நகையை திருடிக் கொண்டு ஓடுவதாக கூறி எதிரி பிரகாசத்தை துரத்தினார்கள். நானும், அவர்களுடன் சேர்ந்து எதிரியை துரத்தினேன். பின்னர் போலீசார் எதிரியை பிடித்து விட்டார்கள். முதலில் எதிரியிடம் விசாரித்த போது, அவர் உண்மையை கூறவில்லை. பின்னர் போலீசார் விசாரித்த போது எதிரி உண்மையை கூறி தன்னிடமிருந்த இரண்டு மாட்டல் மற்றும் கொலுசு இரண்டினை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் ரோகினி எனக்கு என்ன உறவு முறை என்றால், அவர் எனது மருமகள் ஆவார். போலீசார் விசாரணையின் போது, ரோகிணி எனது மருமகள் என்று நான் கூறவில்லை என்றால், சரிதான். எதிரியின் மனைவி பெயர் அமுதா என்றாலும், அவர் எங்கு தங்கியுள்ளார் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் ஆஜர் எதிரியை பார்த்ததே கிடையாது என்றால், சரிதான். ஆஜர் எதிரி நகைகள் எடுத்து கொடுத்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரியின் மகள் தாரணியை எனது மருமகள் 14 வயதில் திருமணம் செய்து வைத்தார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிரியின் மகளை 14 வயதில் திருமணம் செய்து வைத்ததால் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எனது மருமகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.08 14:36:02 +0530

அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:36:07 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-3- Witness
for Prosecution

CC No. 76/2025 Crime No. 20/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 3 பிரதாப் | Village | |
| Father's Name/Husband's Name | | Talukp | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 08.07.2026 | | | |

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் பூணாச்சியில் குடியிருந்து கொண்டு, டிரைவர் வேலை செய்து வருகிறேன். நான் எனது சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது, அங்கு போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் 2, 3 கையொப்பங்கள் பெற்றார்கள். எதற்காக அந்த கையெழுத்து என்று எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி பிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 25.01.2025ம் தேதியன்று எங்கள் ஊரில் உள்ள ரோகினியின் வீட்டிற்குள் புகுந்து அவரது பக்கத்து வீட்டுக்காரரான பிரகாஷ் நகைகளை திருடி சென்று விட்டதாக ஊருக்குள் பேசிக் கொண்டதாகவும், பின்னர் மறுநாள் 26.01.2025–ம் தேதியன்று காலை சுமார் 08.15 மணியளவில் நான் ரோகினியின் வீட்டின் வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது போலீசார் அங்கு வந்து சம்பவ இடத்தில் விசாரித்து பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்து கொண்டிருந்ததாகவும்,

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:36:14 +0530

அந்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், பின்னர் அன்றைய தினம் பகல் 12:30 மணியளவில் நான் சொந்த வேலையாக பூதப்பாடி டாஸ்மார்க் வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், அங்கு போலீசார் எதிரி பிரகாசை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், அங்கிருந்த பழனிச்சாமி என்பவர் முன்னிலையிலும் போலீசார் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் எதிரி தனது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தங்கம் மாட்டல் ஒரு ஜோடி மற்றும் வெள்ளி கொலுசு ஒரு ஜோடி ஆகியவற்றை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், பழனிச்சாமியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:36:19 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-4- Witness
for Prosecution

CC No. 76/2025 Crime No. 20/2025 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 4 பழனிச்சாமி | Village | |
| Father's Name/Husband's Name | | Talukp | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 08.07.2026 | | | |

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அட்டவணைபுதூரில் குடியிருந்து கொண்டு, நாதஸ்வர வித்துவானாக உள்ளேன். தேதி, மாதம் நினைவில்லை. எவ்வளவு நாட்கள் இருக்கும் என்றும் எனக்கு நினைவில்லை. ஒருநாள் நான் பூணாச்சிபுதூர் அருகில் வந்து கொண்டிருக்கும் பொழுது, அங்கிருந்த போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். எதற்காக அந்த கையொப்பம் என்று எனக்கு தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி பிரகாஷின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **எதிரி பிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்குதொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 26.01.2025–ம் தேதியன்று பகல் 12:30 மணியளவில் நான் சொந்த வேலையாக பூதப்பாடி டாஸ்மார்க் வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், அங்கு போலீசார் எதிரி பிரகாசை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:36:24 +0530

வாக்குமூலம் அளித்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், அங்கிருந்த பழனிச்சாமி என்பவர் முன்னிலையிலும் போலீசார் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் எதிரி தனது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தங்கம் மாட்டல் ஒரு ஜோடி மற்றும் வெள்ளி கொலுசு ஒரு ஜோடி ஆகியவற்றை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், பழனிச்சாமியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.08 14:36:30 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani